1972 மார்ச் 6]

ஆலோசித்து, விரைவில் முடிவு எடுக்கத்தக்க வகையில் இந்த ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்ஸ் விரைவில் முடிவுறும் என்று நம்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த போர்ட் துரிதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையாட்கள் சம்பந்தமாக ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது? அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்க அரசாங்கம் வேண்டிய ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் நிரந்தர மாக்கப்படவேண்டும் என்பது ஒரு முக்கியமான விஷயம். அதில் ஐந்து ஆண்டு கால சர்விஸ் இருந்தவர்களைத்தான் நிரந்தரமாக்க வேண்டும் என்று ஏற்கனவே பொதுப்பணித் துறையில் அரசாங்கம் ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட வர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய வேண்டும். இதிலும் அதே முடிவின் தொடர்பைச் செயல்படுத்துவதா என்பதற்காக அதன் ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்ஸ் முடிவுறவேண்டும். அதை விரைவில் முடித்துத் தரவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

காவல் துறையில் மாவட்ட அளவில் குழுக்கள்

*215 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடை யளிப்பாரா—

பொதுமக்களின் புகார்களைக் கவனிக்க போலீஸ் துறையில் மாவட்டந்தோறும் ஒரு குழு அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாவட்டந்தோறும் பொது மக்கள் தருகிற புகார்களைக் கவனிப்பதற்கும் போலீஸ் துறையில் அவர்கள் செய்கிற சில தவறுகளைக் களைவதற்கும் மாவட்டந் தோறும் குழு அமைத்தால் சிறப்பாகயிருக்குமே. எனவே, இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதுள்ள நிலைமைகளே ஒழுங்காகச் செயல்பட்டுவருகிறது. ஆகவே மறுபரிசீலனை செய்வதற்கு அவசியமில்லை.

திரு. சொ. காவேரிமணியம்: டி.டி.ஸி. மீட்டிங் நடக்கும் போது உயர்தர அதிகாரிகள் மாவட்டரீதியாகக் கலந்துகொள் கிறார்கள். அதில் போலீஸ் துறை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கலந்துகொண்டால் இம்மாதிரியான குறைகளைச் சொல்ல வாய்ப்பாகயிருக்கும். இதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்ட வளர்ச்சிக் குழுவில் மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் கலந்து கொள்வது தான் பொருத்தம் என்று கருதுகிறேன்.

திரு. எம். தேவராசன்: பொது மக்களிடமிருந்து வருகிற புகார்களை கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் சிலசமயங்களில் கவனிப்பதில்லை. எனவே மாவட்ட கண்காணிப்பாளர்கள் தலைமையில் மாதமொருமுறை பொதுமக்களின் குறைகளை ஆராயும் நாள் என்று வைத்து பொதுமக்களின் குறைகளைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே போலீஸ் இலாகா சூப்பரின்டென்டெண்ட் அவர்கள் தலைமையிடத்தில் இருக்கும்போது அவர்களே குறைகளைக் கேட்டுவருகிறார்கள். அதுதான் இப்போது வழக்கமாக இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது மாவட்ட அபிவிருத்தி கவுன்ஸில் கூட்டங்களில் மாவட்ட போலீஸ் அதிகாரிகள், மதுரையைப் பொறுத்தவரையில் பங்கெடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆகவே எல்லாயிடங்களிலும் அவர்கள் பங்கு எடுத்துக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதிகாரிகள் பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று சொன்னார்கள். அதைக் கவனிக்கவேண்டும். சில வளர்ச்சிமன்றக் குழுக்களில் உறுப்பினர்களே பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று நான் கேள்விப்பட்டேன். நான் தங்களைச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன். ஆகவே. அதையும் உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். சட்டசபையைப் பார்க்கும்போது உறுப்பினர்கள் எவ்வளவு அக்கறையோடு மக்கள் பிரதிநிதிகளுடைய வேலையைச் செய்கிறார்கள் என்பது விளங்கும்.